

சேலம் மாநகராட்சி நான்கு மண்டலங்களிலும் பழுதடைந்த தார்சாலைகளை புதுப்பிக்கும் பணிகளுக்கு ரூ.523 இலட்சம் மதிப்பீட்டில் 79 சாலை பணிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், நேற்று (25.06.2025) தொடங்கி வைத்தார். உடன் மேயர் ஆ.இராமச்சந்திரன், ஆணையாளர் டாக்டர்.மா.இளங்கோவன், மண்டலக்குழுத்தலைவர் திருமதி.செ.உமாராணி மாநகர பொறியாளர் ஆர்.செல்வநாயகம் மற்றும் பலர் உடனிருந்தனர்.




மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (25.06.2025) சென்னை, கலைவாணர் அரங்கில், ஓமந்தூரார் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் 5வது இளங்கலை மருத்துவ மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு மாணவ, மாணவியர்களுக்கு பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி விழா பேருரையாற்றினார்கள். இந்நிகழ்வில் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழக துணை வேந்தர் மரு.நாராயணசாமி, ஓமந்தூரார் அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு. அரவிந்த், துணை முதல்வர் மரு.லூசி நிர்மல் மடோனா, மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.திருவேங்கட செந்தில் குமார். பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர் திரு.ஸ்ரீராமுலு மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள், மருத்துவ மாணவர்களின் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக

# இளைஞர் அணி - மாணவர் அணிக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில்!

காஞ்சிபுரம், ஜூன்.26-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் - மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் முனைவர் எல்.பிரபு ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கை:-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக இளைஞர் அணி மற்றும் மாணவர் அணி ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் கழக அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம் இன்று 26.06.2025 வியாழக்கிழமை மாலை 5.00 மணியளவில் ஆலந்தூர் கத்திப்பாரா மேம்பாலம் அருகில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்களின் தலைமையிலும்,

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக இளைஞர் அணி - மாணவர் அணி பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழக அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று அவசியம் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இக்கூட்டத்தில் மாவட்டம் முழுவதிலுமிருந்து ஒன்றிய - நகர - பகுதி - பேரூர்களில் இளைஞர் அணி சார்பில் தெருமுனைக் கூட்டங்கள் நடத்துவது சம்மந்தமாக கலந்து ஆலோசிக்கப்பட உள்ளது.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் கூறியுள்ளனர்.

### திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் குடமுழுக்கு திருவிழா!

# ஜூலை 4 முதல் 8 வரை - சிறப்புப் பேருந்துகள் இயக்கம்!

## போக்குவரத்துத் துறை அமைச்சர் – சா.சி.சிவசங்கர் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 26-

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் குடமுழுக்கு திருவிழா 07.07.2025 அன்று நடைபெறவுள்ளதால், பொதுமக்கள் பங்கேற்க வசதியாக, 04.07.2025 முதல் 08.07.2025 வரை சிறப்புப் பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து மற்றும் மின் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் குடமுழுக்கு திருவிழா 07.07.2025 அன்று நடைபெறவுள்ளதால், பொதுமக்கள் வரும் 04.07.2025 முதல் 08.07.2025 வரையிலான நாட்களில், இவ்விழாவிற்கு, தமிழ்நாட்டில் பல ஊர்களிலிருந்து 3 இலட்சம் முதல் 5 இலட்சம் வரை வருகை புரிவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்விழாவில் பொதுமக்கள் பங்கேற்க வசதியாக வரும் 04.07.2025 மதியம் முதல் 08.07.2025 மதியம் வரை திருநெல்வேலி, தூத்துக்குடி, நாகர்கோவில், மதுரை மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளிலிருந்து திருச்செந்தூருக்கு 400 சிறப்புப் பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், இவ்விழாவினை முன்னிட்டு, திருச்செந்தூரில் திருநெல்வேலி சாலையில் குமாரபுரம், நாகர்கோவில் சாலையில் தெப்பக்குளம், தூத்துக்குடி சாலையில் ITI வளாகம் ஆகிய மூன்று இடங்களில் தற்காலிக பேருந்து நிறுத்தம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மூன்று தற்காலிக பேருந்து நிறுத்தத்திலிருந்து, திருச்செந்தூர் கோவில் வாசல் வரை செல்வதற்கு வசதியாக 30 கட்டணமில்லா சிறப்புப் பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்விழாவினை முன்னிட்டு, தமிழ்நாட்டின் பிற பகுதிகளில் உள்ளவர்கள் பங்கேற்க வசதியாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் சார்பில் தினசரி சென்னை, திருச்சி, கும்பகோணம்., காரைக்குடி, புதுக்கோட்டை, மதுரை. ,கோயம்புத்தூர், சேலம், ஈரோடு திருப்பூர் ஆகிய இடங்களில் இருந்து திருச்செந்தூருக்கு இயக்கப்படும் பேருந்துகளுடன், கூடுதலாக சிறப்புப் பேருந்துகளை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், 06.07.2025, 07.07.2025 மற்றும் 08.07.2025 ஆகிய நாட்களில் பயணிகள் எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால், தொலைதூரத்தில் இருந்து திருச்செந்தூருக்கு பயணம் மேற்கொள்ள இருக்கும் பயணிகள், கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு, தங்களது பயணத்திற்கு https://www.tnstc.in/ மற்றும் TNSTC Mobile App மூலம் பயணச்சீட்டினை முன்பதிவு செய்து பயணிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இச்சிறப்பு பேருந்துகள் இயக்கத்தினை கண்காணிக்க, அனைத்து பேருந்து நிலையங்களிலும் போதிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எனவே பயணிகள் மேற்கூறிய வசதியினை பயன்படுத்தி தங்களது பயணத்தினை மேற்கொள்ள இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு போக்குவரத்துத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

### கழக துணை பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. பங்கேற்பு!

# சென்னை வடகிழக்கு மாவட்டம் BLA 2 கலந்துரையாடல் கூட்டம்!



## மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை வடகிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட BLA2 கலந்துரையாடல் கூட்டம் நடைபெறவுள்ளது.

| வ.எண் | நாள் | நேரம் | இடம் |
|---|---|---|---|
| 1 | 27.06.2025<br>வெள்ளிக்கிழமை | மாலை<br>3.00 மணி | ராம்லஷ்மி பாரடைஸ்<br>மஹால் மாதவரம் ரவுண்டானா |

மேற்கண்ட கலந்துரையாடல் கூட்டத்திற்கு சென்னை வடகிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதிவீராசாமி எம்.பி. திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., மாதவரம் தொகுதி பார்வையாளர் கே.அருண், திருவொற்றியூர் தொகுதி பார்வையாளர் எஸ்.மோகன்,மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக, ஒன்றிய கழக, பேரூர் கழக, செயலாளர்கள், நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள் அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள்,, உள்ளாட்சி பிரதிநிதிகள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 2026 சட்டமன்ற தேர்தல் குறித்து

**மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ.**
செயலாளர், வடகிழக்கு மாவட்ட தி.மு.க.






பம்மல் வடக்கு பகுதி, அனகாபுத்தூர் 30 வது பாகச் செயல் வீரர்கள் கூட்டத்தில் பகுதிச் செயலாளர் த. ஜெயக்குமார் சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் மாநகரப் பிரதிநிதி சி.பார்த்தசாரதி, வட்டச் செயலாளர் க.மோகன், மாமன்ற உறுப்பினர் வாணிஸ்ரீ விஜயகுமார், தொமுச பேரவை க.ரவி, சிவசங்கரய்யா, ஜி.ரகு மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.





# தி.மு.க. இளைஞர் அணி



## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### மயிலாடுதுறை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.கே.மருது அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–நகரம்–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 26.06.2025 | மயிலாடுதுறை வடக்கு ஒன்றியம் | கடைவீதி, கடலங்குடி | ஆடுதுறை மு.உத்திராபதி<br>கோ.ரகுநாத் |
| 2 | 28.06.2025 | மயிலாடுதுறை கிழக்கு ஒன்றியம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி அருகில், மன்னம்பந்தல். | கவிஞர் சாவல்பூண்டி<br>மா.சுந்தரேசன்<br>மா.க.சூர்யா |
| 3 | 29.06.2025 | மயிலாடுதுறை மேற்கு ஒன்றியம் | பெட்ரோல் பங்கு அருகில், சோழம்பேட்டை. | கவிஞர் சாவல்பூண்டி<br>மா.சுந்தரேசன்<br>நாகை பா.அருண்குமார் |
| 4 | 30.06.2025 | மணல்மேடு பேரூர் | பேரூராட்சி அலுவலகம் அருகில், மணல்மேடு. | மயிலாடுதுறை சின்னமாரியப்பன்<br>அ.தீன்ஷா நூஃப் |
| 5 | 01.07.2025 | செம்பனார்கோவில் தெற்கு ஒன்றியம் | கடைவீதி, இலுப்பூர். | ஆடுதுறை மு.உத்திராபதி<br>சொ.தமிழினியன் |
| 6 | 03.07.2025 | செம்பனார்கோவில் வடக்கு ஒன்றியம் | ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில், கீழையூர். | ஆரூர்.மணிவண்ணன்<br>சொ.தமிழினியன் |
| 7 | 04.07.2025 | செம்பனார்கோவில் மத்திய ஒன்றியம் | கடைவீதி, திருக்கடையூர். | மருதூர் பி.எஸ்.அகிலன்<br>த.குமரவேல் |
| 8 | 05.07.2025 | குத்தாலம் மேற்கு ஒன்றியம் | கடைவீதி, நச்சினார்குடி. | பசும்பொன் ரவி<br>த.குமரவேல் |
| 9 | 06.07.2025 | மயிலாடுதுறை நகரம் | விஜயா திரையரங்கம் அருகில், மயிலாடுதுறை. | பசும்பொன் ரவி<br>ஜோ.வியானி விஸ்வா |
| 10 | 07.07.2025 | குத்தாலம் வடக்கு ஒன்றியம் | பழைய கூடலூர் | தூத்துக்குடி சரத்பாலா<br>ஜோ.வியானி விஸ்வா |
| 11 | 08.07.2025 | குத்தாலம் மேற்கு ஒன்றியம் | கடைவீதி, குத்தாலம். | தூத்துக்குடி சரத்பாலா<br>இரா.செ.கபில்சாய் |
| 12 | 09.07.2025 | சீர்காழி கிழக்கு ஒன்றியம் | கடைவீதி, மங்கை மடம். | சைதை.சாதிக்<br>சொ.தமிழினியன் |
| 13 | 10.07.2025 | சீர்காழி மேற்கு ஒன்றியம் | விளந்திடசமுத்திரம், சீர்காழி. | சைதை.சாதிக்<br>சொ.தமிழினியன் |
| 14 | 11.07.2025 | சீர்காழி நகரம் | பழைய பேருந்து நிலையம் அருகில், சீர்காழி. | பசும்பொன் ரவி<br>கோ.ரகுநாத் |
| 15 | 12.07.2025 | குத்தாலம் கிழக்கு ஒன்றியம் | கடைவீதி, பெரம்பூர் | பசும்பொன் ரவி<br>இர.மதுமிதா |
| 16 | 13.07.2025 | கொள்ளிடம் கிழக்கு ஒன்றியம் | கடைவீதி, கடவாசல் | ஆடுதுறை மு.உத்திராபதி<br>இரா.செ.கபில்சாய் |
| 17 | 14.07.2025 | கொள்ளிடம் மேற்கு ஒன்றியம் | அகரவட்டாரம் பிரதான சாலை | சேலம் சுஜாதா<br>ரா.கருணா |
| 18 | 15.07.2025 | தரங்கை பேரூர் | புதிய பேருந்து நிலையம், பொறையார். | சேலம் சுஜாதா<br>மா.க.சூர்யா |
| 19 | 16.07.2025 | வைத்தீஸ்வரன்கோவில் பேரூர் | மேலவீதி, வைத்தீஸ்வரன்கோவில். | கோமல் விஜயஅறிவழகன்<br>மா.க.சூர்யா |
| 20 | 17.07.2025 | மயிலாடுதுறை மத்திய ஒன்றியம் | கடைவீதி, நீடூர் | சூர்யாகிருஷ்ணமூர்த்தி<br>இர.மதுமிதா |

**மயிலாடுதுறை**
நாள் : 25.06.2025

கலைஞர் 100 1924 - 2023

